சென்னை சட்டசபை

வரவு செலவு திட்ட விவாதம்

முஸ்லிம்கள் புகார் - தாழ்த்தப்பட்ட வகுப்பார் குறை

சென்னை, பெப்ருவரி 28

மீண்டும் பகல் போஜனத்துக்கு பின் சபை கூடியதும் ஸ்ரீமான் ஆர். சீனிவாச ஐய்யங்கார் பேசுகையில், இந்த வரவு செலவுத் திட்டம் கண்துடைக்கும் திட்டமே தவிர வேறல்ல. 1927-28-ம் வருடத் துவக்கத்தில் 8 கோடி பணமிருந்து வருட முடிவில் 312 லட்சம் பாக்கியிருந்தது. ஆனால், அடுத்த வருடக் கணக்கு மிகக் குறைந்ததற்குக்காரணம் எங்கோ பிசகிருக்க வேண்டுமென்று தான் தோன்றுகிறது. மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைபோதியதாயில்லை. கலால் வருமானத்தில் கடைகள் ஏலத்தொகை அதிகப்பட்டதன் மூலமாக 36 லட்சம் வருமானத்திற்குமதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு குடி மூலமான வருமானம் அதிகப்பட்டது அதிகக் குடியினால் தான் ஏற்படக் கூடுமென்றும் சொல்ல வேண்டும். மதுவிலக்குப் பிரசாரத்திற்காக 4 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இத்தொகையை வீண் செலவிடுவதற்குப் பதிலாக, மந்திரி சில குறிப்பிட்ட ஜில்லாக்களில் பூரண மதுவிலக்கைத் தைரியமாய் அனுசரித்துப் பார்ப்பது உசிதமாகும் எனக் கூறினர்.

சிங்கம்பட்டி ஜமீன்தார்

அவர்கள் அடுத்தபடியாகப் பேசுகையில், சிவகங்கை ஜமீன்தாரின் வருமானம் தற்போது சரிப்பட்டிருப்பதனால் அந்த ஜமீன்தாரியை ஜமீன்தாரிடமே சர்க்கார் ஒப்புவித்துவிட வேண்டுமெனக் கூறினர்.

திரு. ஸி. கோபால மேனன்

பின்னர் பேசுகையில் வரிகள் குறைக்கப்பட்டதன் சம்பந்தமாகஸ்டாம்புக் கட்டணத்தைத் தவிர மற்றெதிலும் வரி குறைக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. குடித் தீயை ஒழிப்பிதன் சம்பந்தமாக சர்க்கார் திட்டமான ஒரு கொள்கையுடன் வேலை செய்யவேண்டும். ஸ்தலஸ்தாபனங்களின் உதவிக்காக ஒதுக்கப்பட்ட தொகை உபயோகிக்கப்படாமல் விடப்படுவது வருந்தத்தக்கது. இத்தகைய நிலைமை இவ்வருடம் மட்டுமன்றி பலகாலும் ஏற்பட்டுதான் வருகிறது. மேஸ்டன் நம்மாகாணத்திற்கு வந்தபோது நம்மாகாண பண நிலைமை அதிகமாக மிச்சப்பட்டிருந்ததால் தான் அவர் மாகாணக்கட்டத்தில் சென்னை அதிகத் தொகைப்படவேண்டுமென்று திட்டஞ்செய்தார். தற்போதைய பணநிலைமையும் அவ்வாறு தானிருக்கின்றது. கடன்களை மீட்டுக்கொள்ளும் விஷயம் வருட வருமானத்தைக் கொண்டு தான் ஈடுசெய்யப்பட வேண்டியது அவசியம். வருமானத்தைக் கொண்டு முதல் போடத்தக்க செலவுகளுக்கு விநியோகம் செய்வது தவறு எனக் கூறினர்.

திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை

பேசியதாவது:-வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது அவ்வந்த வகுப்புகளின் குறைகளை எடுத்துச் சொல்லி பரிகாரம் தேட முயல்வது வழக்கமாதலால் நானும் அந்த வழக்கத்தையொட்டி தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் குறைகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இவ்வகுப்பாருக்கு போதிய நிலங்கள் கொடுத்துதவப்படவில்லை. எங்கள் குழந்தைகளுக்குக் கல்வி சம்பந்தமான போதியவசதிகளுமில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்குத்தர்க்காஸ்து கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் சர்க்கார் கீழ்தரசிப்பந்திகளான கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கடத்தால் சரிவர கொடுக்கப்படாமல் அவ்வகுப்பாருக்குப் பல கஷ்டங்கள் விளைக்கப்பட்டு வருகின்றன. சர்க்காரால் பல பாசனத் திட்டங்களையும், ஹைட்ரோ எலக்ட்ரிக் திட்டத்தையும் கைக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் அதில் எங்கள் வகுப்பாருக்கு எத்தகைய சம்பந்தமுமில்லாதிருக்கிறது. போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்களுள் எங்கள் வகுப்பில் இருவர் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். போலீஸ் இலாகாவுக்கு உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதிலாவது நூற்றுக்கு 25-வீதமானவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தொழில் இலாகாவைக் குறித்தமட்டில்ஹோம் மெம்பரால் தாராளமாகப் பணம் ஒதுக்கப்படவேண்டும். மலையாளத்திற்காகத் தனிப்படிஒரு தொழில் இலாகா உத்தியோகஸ்தரைநியமிக்கவேண்டியது அவசியம். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் ஹாஸ்டல் வசதிகளுக்கு வரவு செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்களிக்கப்படும் பகல் போஜன சௌகரியமும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. கலால் கொள்கையைக் குறித்தமட்டில் வெள்ளையானை நம்மைத்துரத்திக்கொண்டு வருவதாகத் தான் தெரிகிறது. என் சமூக விஷயத்தில் கல்வி முன்னேற்றத்திற்காகப் பொருளாதார மெம்பர் அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவைச்சேர்ந்தசட்டியப்பட்டியில் எங்கள் வகுப்பார் படிசெய்து வந்தனர். இவர்களுக்குக்கூட்டுறவு இலாகாவினால் கடன் கொடுக்கும்படி கேட்டதற்குத் திருப்திகரமான பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்காக இரண்டாந்தரம் பாடசாலை ஒன்று கூட ஸ்தாபிக்கப்படவில்லை. ஆயினும் ஹோம் மெம்பர் தாழ்த்தப்பட்ட வகுப்புப்பெண்களை இலவசமாகப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்திருப்பதற்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் எனக் கூறினர்.

அடுத்தபடியாக கொல்லபள்ளி ஜமீன்தாரும், வெங்கய்யாவும் பேசினார்கள்.

ஸ்ரீமான் ஜே. எ. சுல்தான்

பின்னர் பேசியதாவது:—இந்த வரவு செலவுத் திட்டம் கிளாட்ஸன் திட்டத்தைப்போன்றிருக்கிறது. ஏனெனில், கிளாட்ஸன் திட்டம்எப்போதும்பொது ஜனங்களுக்கு நன்மையளிப்பதையே மூலாதாரக் கொள்கையாயுடையது. மலையாளத்தில் பெரும் தீங்கிழைத்து வரும் மலேரியா சுரத்தை ஒழிக்க எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதென்று தெரியவில்லை. திரு. ஏ. பி. செட்டி சொல்லியதை நானும் ஆதரிக்கின்றேன். ஆனால், ஓட்டுக் கொடுக்கும்போது அவரும் எங்களுடன் சேர்ந்து ஓட்டுக் கொடுப்பாராவென்பது தான் கேள்வி. (நகைப்பு) மந்திரிகள்நிர்வாகச்சபைமெம்பர்கள் முதலியோரின் சுற்றுப் பிரயாணங்களினால் புஷ்பங்களின் விலையும் பழங்களின் விலையும் அதிகரித்து வருவதாகக் கேள்விப்படுகின்றேன் (நகைப்பு) இத்தகைய சுற்றுப்பிரயாணங்களினால் எங்களுக்குச் சங்கடந்தான் ஏற்படுகிறது. இவர்கள் திடீரென்று ஆங்காங்கு விஜயம்செய்து விஷயங்கள் உள்ளதுள்ளவாறு அறிந்துகொள்ள வேண்டும். ஹர்த்தால்களின் போதும் மற்ற விஷயங்களிலும் மலையாளத்திலிருந்து விசேஷபோலீசாரை அழைப்பது கண்டிக்கத்தக்கது. கலாசாலை மாணவர்கள் ராஜீய விஷயத்தில் தலையிடக்கூடாது என்று சொல்வதுதவறு. இங்கிலாந்தில் கிளாட்சன் முதலியவர்கள் மாணவர்களாயிருக்கும்போதே ராஜீயவிஷயங்களில் கலந்து கொண்டிருப்பதாயும் கூறினர்.

சகஜானந்தம் அவர்கள்

பேசியதாவது: எங்கள் குறைகளை முனிசாமிப் பிள்ளை சொல்லியிருக்கிறார். ஆயினும் சில முக்கிய விஷயங்கள் சொல்ல வேண்டுவது அவசியமாயிருக்கின்றது. மதுவிலக்கு பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்ட 4லட்சத்தைத்தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் முன்னேற்றத்திற்காக உபயோகிக்கப்படுவது உசிதமாகும். கள்ளுக்குடித்து விட்டு கெட்டுப் போன பின் அதனைக் குறித்து பிரசாரம் செய்வதைவிட அந்த கள்ளுக்கடைகளை அடியோடு ஒழித்து விடவேண்டும். வருடந்தோறும் நாங்கள் ஒப்பாரிபாடுவது வழக்கமாயிருக்கிறது. அந்தஒப்பாரிக்குயாதொரு பலனுமில்லை. தர்க்காஸ்து நிலங்கள் பயனற்றவற்றைத் தான் கொடுக்கப்படுகின்றது. அன்றியும் அரசாங்கத்தார் ஆதிதிராவிடர்களுக்கு நிலங்கொடுப்பதாயிருந்தால் விசேஷ உத்தியோகஸ்தரை நியமித்தாலன்றி வேறு பலனில்லை. மைசூர் சமஸ்தானத்தில் ஆதித்திராவிடர்களுக்கு நிலமும் மாடு கன்றுகளும் கொடுத்துதவுகின்றனர். சிறு சமஸ்தானம் இத்தகைய சாதகங்களைச்செய்யும் போது பிரிட்டிஷ் சர்க்கார் ஏன் சௌகரியங்கள் செய்து கொடுக்கக் கூடாது. சேரிகளின் நிலைமையை எந்த அதிகாரியும் கவனிப்பதுமில்லை. ராயல் கமிஷன் எந்த சேரியையும் சென்று பார்க்கவில்லை. ஸ்தல ஸ்தாபனங்களை ஒழித்து விடுவதே மேலென்றும் தெரிகிறது. எங்கள் நியமன விஷயமெல்லாம் தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளின் பண்ணையாட்களைத்தான் நியமனம் செய்கின்றனர். இந்த தாலூக்கா ஜில்லா போர்டுகளையும் ஒழித்து இவற்றை முன்போல நிர்வாக அதிகாரிகள் ஆதிக்கத்தின் கீழ் ஒப்படைக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்தை அடியோடு ஒழிக்க வேண்டும். இது மிராசுதார்களின் கையில் நாங்கள் சிக்கித் துன்பப்படுவதற்கு ஹேதுவாகத்தானிருக்கிறது எனக் கூறினர்.

திரு. கலிபுல்லா சாகிப்

பின்னர் பேசியதாவது:— மொத்தத்தில் இந்த வரவு செலவு திட்டம் ஒருவாறு திருப்திகரமாகத் தானிருக்கின்றது. கடன்களைத் தீர்ப்பதே சரியான முறையானதால் இச்சந்தர்ப்பத்தை ஆதரவாகக் கொண்டு பொருளாதார மெம்பர் கடனில் சிறிது குறைக்க ஏற்பாடுசெய்திருப்பது பாராட்டத்தக்கது. மாகாணநிர்வாகத்தில் சிறுபான்மையான வகுப்பாருக்குப் போதிய பிரதிநிதித்துவமிருக்க வேண்டுவது அவசியம். ஹைக்கோர்ட்டில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவமில்லாத குறையை கனம் சட்டமெம்பர் சீக்கிரத்திலேயே நிவர்த்திக்கக் கூடுமென்று நம்புகிறேன். கட்டாய அணையைக் குறித்த மட்டில் சர்க்கார் இதன் சம்பந்தமாகப் பல வாக்குறுதிகள் செய்து ஏதோ சொற்ப உதவி செய்திருக்கின்றனர். ஆயினும், பின்னும் அதிக உதவி புரிந்து அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தரக்கூடுமென்று நம்புகின்றேன். சென்றவருடம் இத்திட்டத்திற்காக 9 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பினும் இவ்வாண்டு இத்தொகை மறைந்ததற்கு யார் உத்தரவாதமென்று தெரியவில்லை. குடிவிஷயத்தில் முஸ்லிம்களுக்கு மதவிஷயமான தடையிருப்பதனால் இதன் சம்பந்தமாக நான் அதிகமாகச்சொல்ல வேண்டியதில்லை. இத்தொல்லை தொழிலாளிகளான ஏழை மக்களைத் தான் மிகுதியும் துன்புறுத்துவதால், மதக்கல்வியும் சாதாரண கல்வியும் போதிக்கப்படுமிடங்களில் இக்குடித் தீயை விளக்கி அதன் மூலமாக அவர்கள் அதனை ஒழிக்கச் செய்வது உசிதமெனக்கருதுகிறேன் எனக்கூறினர்.

திரு. கே. உப்பிசாகிப்

பிறகு பேசுகையில் மாப்பிள்ளைகளின் பரிதாபகரமான நிலையை எடுத்துக்காட்டி ஆயிரக்கணக்கானமாப்பிள்ளைப் பெண்கள் அந்தமானில் துன்பத்திற்குட்பட்டு வருகின்றனர். மாப்பிள்ளைகளைச் சென்னையிலும் பிற விடங்களிலும் நாளுக்கு மூன்றரையணா கொடுத்து பல விதமான நஷ்டத்திற்குள்ளாக்கி வருகின்றது. சென்னையில் இத்தகைய காவலில் வைக்கப்பட்ட ஒரு மாப்பிள்ளை வேலூரிலுள்ள 90 வயதுள்ள தன் தந்தையைச் சென்று பார்க்கவும் சர்க்காரும் போலீஸ் கமிஷனரும் மறுத்து விட்டனர். மலையாள விசேஷப் போலீசார் பிசாசுகளாயிருக்கின்றனர். அவர்கள் மலையாளக் கலகத்தின் போதும் பிறகும் செய்த அக்கிரமங்களுக்கு அளவில்லை. அநேக மாப்பிள்ளைகளை மலையாளத்திற்குத் திரும்பி வரவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அமைதி நிலவியிருக்கும் போதும் அவர்களால் தீமை விளையக் கூடுமா? மாப்பிள்ளைக் கலகத்தில் பல கொடுமைகளுக்குட்பட்ட இச்சபையின் ஜென்மி பிரதிநிதியே ஜெயிலிலுள்ள மாப்பிள்ளைக் கைதிகளில் நூற்றுக்கு 75 வீதம் மாணவர்கள் குற்றமற்ற நிரபராதிகள் என்று எடுத்துக் கூறியிருக்கின்றார். மாப்பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வி போதிக்கப்பட வேண்டுமோ அத்தகைய கல்வி போதிக்கப்படவில்லை. மாப்பிள்ளைகளைக்குறித்த மட்டில் சர்க்காரின் கொள்கை அவர்களுக்களிக்கப்படும் கல்வி மூலமாக மதக்கொள்கைகளையே மறந்து விடச்செய்வதாயிருக்கின்றது எனக்கூறினர்.

மேஜர் நஞ்சப்பா

அடுத்தபடியாகப் பேசுகையில் கூறியதாவது:-நான் இச்சபைக்கு வந்த பின் ராணுவத்திலுள்ளவர்களுக்கு ஏதாவது நன்மை செய்யக்கூடுமென நம்பினேன். ஆயினும், இரண்டரை வருடமாய் ஒன்றும் முடியாமற்போயிற்று. யுத்தத்தில் சேவை செய்து மெடல் பெற்றவர்களுக்கும் (சர்க்கார் தர்க்காஸ்து) நிலங்கள் முதலியவை கொடுக்கப்படவில்லை. இதனால் அத்தகைய மெடல்கள் வீண் பரிசுகள் என்றுதான் கருதப்பட வேண்டியதாயிருக்கின்றது. இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்களிலும் முனிசிபாலிடிகளிலும் நியமன மூலமாக ஸ்தானமளிக்கும்படி பலகாலும் கேட்டுவந்தும் பயனில்லை. அவர்கள் ஓட்டுக்களை விலைக்கு வாங்கின்றி ஸ்தல ஸ்தாபனங்களில் பிரவேசிக்க வழியில்லை எனக் கூறினர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

பின்னர் பேசுகையில் கூறியதாவது:- பெண்களுக்குப் பல்வேறு ஹாஸ்டல்களிலும் சரியான வசதிகளில்லை. பல்வேறுவகுப்புப்பெண்களும்ஹாஸ்டல்களில்ஒற்றுமையாய் வசிப்பதில்லை. சாதாரணமேடைப்பேச்சுகளால் எத்தகைய நன்மையுமேற்படாது. மேலும் நம் பெண்களுக்குப் போதியதேகாப்பியாசப்பயிற்சி யளிக்கப்படாததும் வருந்தத்தக்கது. பார்ப்பனரல்லாத ஆதிதிராவிடப் பெண்களுக்கு இரண்டாந்தரக் கல்வி பயில சர்க்காரால் உபகாரச்சம்பளமும் மற்ற உதவிகளும்அளிக்கப்படவேண்டும். உபாத்தியாயினிகளுக்குகுடியிருப்பு வசதியளிப்பதைக்குறித்து சர்க்கார் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பெண்கல்வியில் மிகுதியும் முன்னேற்றமடைந்த மாகாணமாகக்கருதப்படும் சென்னையிலும் கல்விகற்ற பெண்களின் தொகை நூற்றுக்கு 2. 5 வீதம் தானிருக்கிறது. மாணவர்களின் தொகை 9. 5 வீதமிருக்கிறது.

இரண்டாந்தரப் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு வைத்தியக்கல்வி யளிக்கப்பட்டு வந்த போதிலும் பெண்கள் விஷயத்தில் இஷ்டத்தைப் பொருத்ததாயிருக்கிறது. எதிர்காலத்தாய்மார்களுக்கு வைத்திய கல்வி அவசியமாய்ப் போதிக்கப்படவேண்டியது இன்றியமையாதது. முஸ்லிம் பெண்களைக் கல்லூரிக்குக் கொண்டு வருவதற்கு வண்டி வசதிகளளிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். ஆதிதிராவிட சிறுவர்களுக்கு அளிக்கப்படும் சாதகங்கள் பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டும். அவர்களுக்குச் சர்க்காரால் ஆண்களைவிட அதிகப்பட்ட சாதகங்கள் அளிக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் மேக ரோக சம்பந்தமாக விசேஷ உத்தியோகஸ்தரை நியமிக்க வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கியிருப்பதற்கு பொருளாதார மெம்பருக்கு நன்றி செலுத்துகிறேன். கோஷா ஆஸ்பத்திரியையும் பெண்கள் பிரசவ ஆஸ்பத்திரியையும் அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் கவனம் செலுத்தாதிருப்பது வருந்தத்தக்கது என்று கூறினர்.

திரு. அப்துல் ஹமீதுகான்

பின்னர் பேசியதாவது:—சிலர் இச்சர்க்காருக்கு எத்தகைய கொள்கையுமில்லை என்று குறை கூறினர்கள். நான் சென்னை சர்க்காருக்கும் மற்ற மாகாண சர்க்கார்களைப்போன்று கொள்கையிருக்கின்றதென்றும், அக்கொள்கை பிரஜைகளின் இலட்சியத்திற்குச் சாதகமானதாயில்லாமல் விரோதமான கொள்கை தான் என்றும் சொல்லுவேன். பணவீக்கப்படும் சிக்கனத்தைஅனுசரிக்காமல் நமது சர்க்கார் செலவை மிகுதிப்படுத்திக் கொண்டே போகின்றது. சர்க்காருக்குச் சரியான கொள்கையிருக்குமாயின் அவ்வந்த இலாகாக்களின் வீண் செலவுகளைக் குறைத்து சிக்கனத்தைக்கைக்கொண்டிருக்கும். சென்னையில் போலீசுக்கு அதிகப்பணம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கமிஷனர் ஆங்கிலோ இந்தியப் போலீசாரை அதிகப்படுத்த தயாரித்த திட்டத்தை சென்னை சர்க்காரும் ஒப்புக்கொண்டிருக்கின்றது. சிறைச்சாலைகளைக் குறித்தமட்டில் இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுக்காமல் சிறைச்சாலை சூப்பரின்டெண்டுகளாக ஐ. எம். எஸ். ஆபீஸர்களைக் கொண்டுவருவதுடன், ஜெயிலர் ஸ்தானத்துக்கு ஆங்கிலோ இந்தியரை நியமிக்கப்படுகிறது. போதிய கைத்தொழில் பாடசாலைகளும் கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்படுவதற்குப் பதிலாக இவ்விடக் கல்லூரிகளை அதிகப்படுத்துவது அவசியம். முஸ்லிம் கல்வி விஷயமாக முக்கிய கவனம் செலுத்தப்படவில்லை. இதன் சம்பந்தமாக விசாரித்தறிவிக்க உத்தியோகப் பற்றற்ற கமிட்டியொன்று நியமிக்கப்படவேண்டுவது அவசியமாகும் எனக் கூறினர்.

திரு. டேனியல் தாமஸ்

பேசியதாவது:- [illegible] தாம்பிரபரணியில் [illegible] தண்ணீர் வருமானம் [illegible] காலத்தில் தாம்பிரபரணி [illegible] தண்ணீர் [illegible] பல தடவைகளில் யோசனை [illegible] அதனைக் குறித்து [illegible] வருவதாகப் [illegible] யன்றி, [illegible] பபடவில்லை. [illegible] சம்பந்தமாக [illegible] கள் சொல்ல [illegible] பொறுக்கினாலும் [illegible] குக் கொண்டுவரப்படுகிறது [illegible] களை யடுத்துள்ள இந்த ரிசர்வ் காடுகளில் வீண் பாலைவனம் போன்றவை தான். இங்கு கால் நடைகளை மேய விடுவது மில்லை. கிரிமினல் நீதி பரிபாலனத்தைக் குறித்தும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. இம்மாகாணத்து ஜூரிமுறை ஊழலுக்கிடமில்லாதிருக்கவில்லை. வெளியூர்களிலிருந்து கோர்ட்டுக்குவரும் அம்சேஸர்களுக்குப்படி கொடுக்கப்படுவதில்லை. இந்நிலைமையில் அவர்களுக்குப் போதுமான படியும் கொடுக்கப்படாமையினால் பல ஊழல்களுக்கிட மேற்படுகின்றது. அவர்களுக்கு ஏற்படத்தக்க நேர்மையான செலவுகளுக்குத் தக்கவாறு சர்க்கார்படி கொடுப்பதில்லை என்று கூறினர்.

திரு. என். சிவராஜ

பேசியதாவது:—தொழில் இலாகா உத்தியோகஸ்தர்களை அதிகரிக்கச் செய்து அவ்விலாகா வேலைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படாதது

தொழிலாளர் தகாறு மசோதா

செலக்ட் கமிட்டி கூட்டம்

அரசாங்கத்தின் வெற்றி

புதிய டெல்லி, பிப், 28.

இன்று தொழிலாளர் தகராறு மசோதா செலக்ட் கமிட்டி நெடுநேரம் கூடி அநேகம் திருத்தங்கள் செய்துள்ளது. சமாதான போர்டில் விசாரணை மன்றத்திற்கு அங்கத்தினராக ஒருவரை நியமித்து கவர்னர் ஜெனரலோ அல்லது மாகாண அரசாங்கமோ பிறப்புவிக்கும் உத்தரவைப்பற்றி எவ்வகையிலும் கேள்வி கேட்கவோ வாதாடவோ கூடாது என்று விதிக்கும் எட்டாம் விதியைப்பற்றிப் பலமான வாதமிருந்ததாய்த் தெரிகின்றது. இவ்விதமான நியமனங்களைப்பற்றி வாதாட ஆக்டின் பொதுவிதிகளில் இயற்கையாகவே உரிமை வழங்கப்பட்டுள்ளதென்றும், அந்த உரிமையை எடுத்துவிடக்கூடாதென்றும் திரு. சேஷ அய்யங்கார் எதிர்த்ததாகக்கூறப்படுகின்றது, ஆனால் கமிட்டி இந்த விதிக்கு ஆதரவாய் 10 ஓட்டுக்களும் எதிரிடையாய் 6 ஓட்டுக்களும் கிடைத்தமையால் இதை நிறைவேற்றிவிட்டது. பொதுஜன உபகாரச்சேவை வேலை ஸ்தாபனத்தில் வேலைபார்க்கும் ஒருவன் அனுமதி பெறுதோ அல்லது எழுத்துமூலம் தன் முதலாளிக்கு ஒருமாத நோட்டீஸ் கொடுக்காதோ தானாகவோ நின்று விடுவானாயின் அவனுக்கு ஒரு மாதம் வரை காவல் தண்டனையோ அல்லது 50 ரூபாய் வரை அபராதமோ விதிக்கப்படும், அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்னும் 15ம் விதியைப்பற்றி உக்கிரமான வாதம் நடந்தது. இதை பல உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்கள் எதிர்த்தனர். ஆனால் இதற்கும் நான்கு ஓட்டுகள் அதிகமாய் கிடைத்தமையால் இதுவும் நிறைவேறியது. பின்னர் மசோதாவைஎதிர்ப்பவர்கள் விதியை திருத்த முயன்றனர்.

இதில் அவர்கள் வெற்றி பெற்றனர். அதன்படி ஒப்பந்தத்திற்கு மாறாய் வேலைநிறுத்தம் செய்பவர்களை மட்டும்தண்டிக்க வேண்டுமென மாற்றப்பட்டுள்ளதாய் தெரிகின்றது. மற்றும் சமாதான போர்டு மத்தியஸ்தமன்றம் என முதலியவைகளில் தகராறில் அகப்பட்டுள்ள முதலாளிகளோ அல்லது வேலைக்காரர்களோ அங்கத்தினர்களாய் இருக்கக்கூடாதென்றும் ஓர் முக்கியமான திருத்தம் செய்யப்பட்டுள்ளதாய்த் தெரிகின்றது.

கு வருந்தியதுடன் ஆலோசனை போர்டாரின் சிபார்சுகளைக்குறித்தும் பொருளாதார மெம்பர் ஒன்றும் கவனிக்காததை எடுத்துக் காட்டி தாழ்த்தப்பட்ட வகுப்புப்பெண்களுக்கு ஹாஸ்டல் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். பின்னும் சேரிகளிலேயே கட்டாய ஆரம்பக்கல்வி போதிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். கிராமப் பிரதேசங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் சௌகரியத்தைக்குறித்து ஒன்றுமே கவனிக்கப்படவில்லை. கிராமங்களுக்கும் சேரிகளுக்கும் போக்குவரத்து ரஸ்தாக்களே கிடையாது. இதன் சம்பந்தமாயும் சர்க்கார் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் கூறினர்.

எல். கே. துளசிராம்

பின்னர் பேசுகையில் சட்டசபையில் தொழிலாளிகளுக்குப் பிரதிநிதித்துவமில்லாமையைக் குறித்து [illegible] அந்த [illegible] சென்னை [illegible] தொழில் பயிற்சி ஸ்தாபனம் வெள்ளையானையைப்போல் வீண் செலவுக்குத் தானிடமாயிருக்கிறது. [illegible] சர்க்கார் மெம்பர்களுடைய ஒருநாளைக்கு வரும் [illegible] தானிருக்கும். இதன்றி ஒரு மைல் நீளமுள்ள அணைகட்டுவதற்கு வெளி நாடுகளிலிருந்து லட்சக் கணக்கான டன்கள் சிமிண்டு வரவழைக்கப்படுகின்றது. நீதிபரிபாலன சம்பந்தமான குறைகளுக்கோரளவில்லை. சிவில் நீதி நாடகத்திற்கு அடுத்தபடியாகி வருகின்றதென்றுதான் சொல்லவேண்டும். சிவில் நீதிபரிபாலனம் சிவில் ஊழியவர்க்கத்தாரின் கைகளில் இருக்கும்வரை அதற்கு மதிப்பு கிடையாதென்று அனுபவமுள்ள பல வக்கீல்கள் சொல்லுகின்றனர். ஜூரிகளில் 60 வயதுக்கு அதிகப்பட்ட வயதுள்ளவர்கள் கூடாதெனினும் சமீபத்தில் திருச்சியில் 80 வயதுள்ளவரை ஜூரராகக்கொண்டுவந்து அவர் கோர்ட்டுவாசலில் விழுந்து இறந்ததற்கு யார் உத்தரவாதம் என்று கூறினர். பின்னர் திரு. வி. ஆர். சீனிவாசய்யங்காரும் பேசினர். இந்நிலையில் சபை கூட்டம் கலைந்தது.